

## யா/ யாழ். இந்துமகளிர் கல்லூரி

## நடுத்தோட்ட
## இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய


# கும்பாபிஷேக மலர்

## 12.06.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் துணை



**எமது கல்லூரிக்கு அருள்பாலிக்கும்**

**நடுத்தோட்ட இராஜவரோதயம் பிள்ளையார்**

J/JAFFNA HINDU LADIES' COLLEGE LIBRARY

**சமர்ப்பணம்**

செந்தமிழர் வாழுகின்ற திருநகர் யாழ்ப்பாணத்தில்
இந்து மகளிர் கல்லூரி பார்போற்ற இலங்குவதற்கு
நடுத்தோட்ட ராஜவரோதய விக்ன விநாயகனே
தந்தருள்க நின்கருணை தாழ்பணிவோம் தூயவனே

எந்த இடர் எதிர்வரினும் ஏத்துவதுன் இணையடியே
தொந்திவயிற் றோனேஎம் தொல்லையெலாம் போக்கிடுவாய்
சந்ததம் உன் பாதமலர் சாத்தி பணிந் தேத்திடுவோம்
வந்திடுவாய் ஐங்கரனே புகழ்ஓங்க வரமருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் ஆலய வரலாறு

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாக்கிற்கு ஏற்ப சிவபூமியாகிய ஈழமணித்திருநாட்டின் வடபுலத்தில தமிழக்குலப் பெண்களின் ஞானபீடமாய், மரபு வழியாக போற்றிக் காக்கப்படும் அவர் தம் விழுமியங்களின் உறைவிடமாய், கலை, பண்பாடு என்பவற்றின் ஊற்றுக்காலாய் நின்று நிலவும் யாழ் இந்து மகளிர் கல்லூரி வளாகத்தில் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் எழுந்தருளி திருவருள் பாலித்து வருகின்றமை ஒரு வரப்பிரசாதமே. அந்த வகையில் கல்லூரியின் வளர்ச்சிக்குக் துணையாக விளங்கும் பெருமானின் ஆலய வரலாற்றை நோக்குவோம்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதல் தமிழ் தலைமை ஆசிரியராய் இருந்து பின் யாழ்ப்பாணத்தில் முடிக்குரிய நியாயதுரந்தரராய் இருந்த வண்ணார்பண்ணை அம்பிகைபாகன் சின்னத்தம்பியின் மூத்த புதல்வரும் ஊர்காவற்றுறை ரேகுத்துரையும் நீதிவானுமாய் இருந்த இராமலிங்கம், கச்சாய் புகழ் பூத்த குடும்பமான இராஜவரோதய முதலியாரின் குடும்பத்தில் உதித்த தங்கமுத்து என்பவரை திருமணம் செய்தார். இராமலிங்கம் சைவசமய வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு உடையவராய் இருந்தமையால் அவரது மனைவியார் தமது பிறந்தகத்தில் இருந்து கொண்டுவந்த ஒரு பிள்ளையார் விக்கிரகத்தை தமது பூர்வீகச் சொத்தான ("பூனை தூக்கிப்பிரயாடி") நடுத்தோட்டம் என்னும் காணியில் பிரதிஷ்டை செய்து ஒரு சிறிய மண்டபமும் கட்டுவித்தார். இக்கோயில் தான் இன்று இராஜவரோதயப் பிள்ளையார் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இராமலிங்கம் சிதபதம் அடைந்த பின் அவரது புதல்வர்களான சிவசுப்பிரமணியமும் சிவகுருநாதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலின் நித்திய, நைமித்திய பூசைகளைச் செவ்வனே நடாத்தி வந்தார்கள். அவர்கள் இக்கோயிலின் கிழக்கே நீண்டதும் விசாலமானதுமான ஒரு பெரிய மண்டபத்தை கட்டுவித்தனர். சிவசுப்பிரமணியம் தனது உபயமாக ஒரு மணியை செய்வித்து கொடுத்தார். அம்மணியில் "இராஜவரோதய விக்கினேஸ்வர பிள்ளையாருக்கு இ.சிவசுப்பிரமணியத்தின் உபயம் 1902" என்றுபொறித்திருப்பதை இன்றும் காணலாம்.

இக்கோயில் இராமலிங்கம் குடும்பத்தவர்களின் குடும்பக் கோயிலாக இருந்து வந்தபோதிலும் இக்கோவிலின் அயலில் உள்ளவர்களும் இங்கு வந்து வழிபாடு செய்தனர். கும்பாபிஷேகம் நடாத்தப்படாத காரணத்தினால் இக்கோயிலில் வருடாந்த மகோற்சவங்கள் நடைபெறவில்லை. ஆதலால் ஏனைய திருநாட்களான சதுர்த்தி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நவராத்திரி, பிள்ளையார் கதை முதலியன உரியமுறையில் செவ்வனே நடத்தப்பட்டு வந்தன. நவராத்திரி விழா இக்குடும்பத்தினரால் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மானம்பூ வாழை வெட்டிற்காக உபயோகிக்கப்பட்டு வரும் வாள் இராமலிங்கத்தின் மகள் வீட்டிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்தது. இக்கோயிலின் வெள்ளி, பித்தளை பாத்திரங்கள் சிவசுப்பிரமணியத்தின் வீட்டிலேயே வைக்கப்படும்.

சிவகுருநாதரும் அவரது மனைவியார் விசாலாட்சி அம்மையாரும் தமது பணத்திலேயே இக்கோவிலுக்கு ஒரு மடப்பள்ளி கட்டுவித்து கொடுத்ததுடன் கோயிலின் மேற்குப்புறத்தே பூசைக்கு மலர்கள் எடுப்பதற்காக ஒரு நந்தவனமும் அமைத்துக் கொடுத்தனர். அம்மையார் இக்கோயில் மூலஸ்தான வாசலுக்கு ஒரு சட்டவிளக்கும் செய்து கொடுத்தார். அச்சட்ட விளக்கு இப்பொழுதும் அவரின் பெயரைத் தாங்கிக் கொண்டு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலப்பகுதி சிவசுப்பிரமணியத்தின் மகள் வள்ளியம்மாவினால் இந்துக் கல்லூரி அதிகார சபைக்கு நன்கொடையாக இந்து மகளிர் கல்லூரியின் உபயோகத்திற்காக அளிக்கப்பட்டு பின்னர் இம்மடப்பள்ளி 1960ம் ஆண்டில் இருந்து 1975ம் ஆண்டு வரை இக்கல்லூரியின் கூட்டுறவுக் கடையாக விளங்கியது. அது இப்பொழுது அழிந்து விட்டது

திருமதி சிவகுருநாதர் விசாலாட்சிஅம்மா இந்து மகளிர் கல்லூரியை நிறுவுவதற்காக தனது 24 நிலப்பரப்பு சீதனக்காணியை இந்துக்கல்லூரி நிர்வாக சபைக்கு நன்கொடையாக ஈகை செய்தார். இதனை அடுத்து சிவகுருநாதரின் பெறாமகள் வள்ளியம்மாவும் அக்காணிக்கு அருகாமையில் இருக்கும் இக்கோயில் அமைந்துள்ள தனது 16 நிலப்பரப்புக் காணியை சபைக்கு கல்லூரியின் உபயோகத்திற்கென மனமுவந்து கொடுத்தார். சிவகுருநாதர் இக்காணி எழுதும் போது குறித்த நன்கொடையை ஏற்பவர் மீது இரண்டு நிபந்தனைகளை விதித்து இருந்தார்.

1. இக்கல்லூரியின் கோயிற் பூசகராக வண்ணார்பண்ணையில் வாழும் குமாரசாமிக்குருக்கள் திரியம்பகக்குருக்கள் (செல்லத்துரைக் குருக்கள்) பரம்பரையில் ஒருவரையே நியமிக்க வேண்டும்.
2. அவரின் வேதனம் மாதாந்தம் கல்லூரியின் அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

இக்கோயிலில் முதலில் பூசை செய்யும் பொறுபைப் பெற்றவர் குமாரசாமிக்குருக்களின் தாயார் திருவேங்கடம்மா எனக் கூறப்படுகிறது. அந்த வகையில் குமாரசுவாமிக்குருக்கள், திரியம்பகக்குருக்களின் பரம்பரையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியக்குருக்களை அடுத்து அவரது மகனான நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் 1972ம் ஆண்டில் இருந்து இவ்வாலய பூசகராக கடமையாற்றி வருகின்றார். தற்போது இவரது மகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசிவசர்மா தந்தையாருடன் இணைந்து பணியாற்றி வருகின்றார்.

அரசாங்கம் இக்கல்லூரியை பொறுப்பேற்ற பின் கோயிலின் நித்திய பூசைகளுக்கு கல்லூரி விடுதிச்சாலையும் பாடசாலை அதிபருமே பொறுப்பாக இருந்தனர். காலப்போக்கில் நித்திய பூசைக்குரிய அரிசி, எண்ணெய் முதலியவற்றை கல்லூரி மாணவிகளே வழங்கி கோயிற்பூசைகள் செவ்வனே நடைபெற உதவினர். தற்போது வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களிடம் சேகரிக்கப்படும் உண்டியல் பணத்தின் மூலமே நித்திய பூசைக்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது.

திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் 1974ம் ஆண்டு தைமாதம் மிருகசீரிட நட்சத்திரத்தில் மூலஸ்தான பெரிய பிள்ளையார் விக்கிரகம் நிறுவப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்கள் அதிபராக இருந்த போது பழைய மாணவிகள் சங்கத்து உதவியுடன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1986ம் ஆண்டு பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1995ம் ஆண்டு தைமாதம் எழுந்தருளிப் பிள்ளையார் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டது. திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் அதிபராக இருந்தபோது 1998ம் ஆண்டு சித்திரைமாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருமதி வேதநாயகி பேரின்பநாதன் அவர்கள் அதிபராக இருந்தபோது புதிதாக வசந்தமண்டபம் அமைக்கப்பட்டு 2010ம் ஆண்டு வைகாசி மாதம் சதய நட்சத்திரத்தில் நான்காவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது திருமதி விமலாதேவி விமலநாதன் அவர்கள் அதிபராக கடமையாற்றி வரும் வேளையில் ஆலய மூலஸ்தானமும் அதனோடு சேர்ந்த முன்மண்டபமும் மீளவும் புதிதாக அமைக்கப்பட்டு 12.06.2020 வைகாசி மாதம் சதய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரத்தில் ஐந்தாவது கும்பாபிஷேகம் நடைபெற்றமை மகிழ்ச்சியான விடயமாகும்.

எமது பாடசாலைக்கு அயலில் நீண்டகாலம் வாழ்ந்தவர்களும் தற்போது டுபாய் நாட்டில் வசித்து வருபவர்களுமான திரு.திருமதி விக்கினேஸ்வரன் செந்தூர் செல்வி குடும்பத்தினர் தமது தாயார் வழிபட்டு வந்த இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய திருப்பணிக்கு உதவ வேண்டும் என்ற பெருவிருப்போடு மேற்கொண்ட கைங்கரியத்தினால் இவ்வாண்டு இவ்வாலய மூலஸ்தானமும் அதனோடு சேர்ந்த சிறிய முன் மண்டபமும் அலங்கார வேலைப்பாட்டுடன் புதிதாக அமைக்கப்பட்டு ஆலயம் முழுவதற்கான வர்ண வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் திரு திருமதி விக்கினேஸ்வரன் செந்தூர் செல்வி குடும்பத்தினரே கும்பாபிஷேக உபயத்தினையும் மேற்கொண்டனர். கும்பாபிஷேகத்திற்கான மேலதிக செலவு விநாயகப்பெருமானின் அடியவர்களினால் வழங்கப்பட்ட நன்கொடை மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

புனருத்தாரண வேலைகள் சிறப்பான முறையில் பூர்த்தியாகி சார்வரி வருடம் வைகாசி மாதம் 28ம் நாள் (10.06.2020) கிரியைகள் ஆரம்பமாகி 29ம் நாள் (11.06.2020) எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு நடைபெற்று 30ம்நாள் (12.06.2020) வெள்ளிக்கிழமை மதியம் 12மணி முதல் 12.30 மணி வரையுள்ள சித்தயோகமும் சதய நட்சத்திரமும் கூடிய சிம்மலக்கின சுபமுகூர்த்த வேளையில் பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வசந்த மண்டபபூசையாகி திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப்பெருமான் வீதியுலா வந்த அருங்காட்சியானது அடியவர்களை பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தியது. அதனை தொடர்ந்து மகேஸ்வரபூசையும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020ம் ஆண்டு கொரோனா இடர்கால சூழ்நிலையிலும் புனருத்தாரண வேலைகள் தடைப்படாமல் சிறப்பான முறையில் நிறைவுபெற்று உரிய தினத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றமை விநாயகப் பெருமானின் திருவருள் என்றே கூறவேண்டும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 10 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று பன்னிரெண்டாம் நாள் சங்காபிஷேகம் வழமை போன்று பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது. விநாயகப்பெருமான் ஆலயத்தில் ஆண்டுதோறும் தைப்பொங்கல் விழாவுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பூசைகள், நவராத்திரி காலை நேர பூசைகள் வகுப்பு ரீதியாக மாணவர்களால் மேற்கொள்ளப்படுகிறது. மாதாந்த சதுர்த்தி, நவராத்தியின் மாலைநேர பூசைகள், பெருங்கதை பூசைகள் என்பன பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் தனிப்பட்ட உபயமாக மேற்கொள்ளப்படுகிறது. வருடாந்த கும்பாபிஷேகதின - சங்காபிஷேகமும் நவராத்திரியின் முதலாம் நாள் கும்பம் வைத்தல் நிகழ்வும் விஜயதசமி நிகழ்வும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் பொது உபயமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்நிகழ்வுகள் யாவும் பாடசாலையின் இந்து மன்றத்தினரால் ஒழுங்கமைக்கப்படுகிறது.

தொடர்ந்துவரும் காலங்களிலும் எமது கல்லூரியானது மாணவரிடையே சைவப்பற்றையும் கலாசாரத்தையும் வளர்த்து அரியபல பணிகளை ஆற்ற நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சல் பாட்டு

### காப்பு

சீர்பூத்தஈழவளநாட்டின் இலங்கும்
யாழ்ப்பாண இந்துமகளிர் கல்லூரி தனில்.
நார்பூத்தநாரியர் நாளுமடி தொழுதேத்ததும்
ஐங்கர! நடுத்தோட்ட இராஜவரோதயா!.
பார்பூத்துபல்கலைசேர் விசாலாட்சிமுதறிஞர்
பரிவுடன் தாபித்தேத்து மொப்பிலாக்.
கார்பூத்த கணபதியே நின்னூஞ்சல் பாடக்
கணபதியேயருள் கூர்ந்து காப்பதாமே.

சீரோங்குவேதங்கள் கால்களாக
சிறந்தநல் லாகமங்கள் விட்டமாக
பாரோங்குபல்கலைகள் வடங்களாக
பன்னுமுறு கவின்கலைகள் பலகையாக
பேரோங்கு மந்திரங்கள் விதானமாக
பேசரிய பிரணவமே நற்பீடமாக
நீரோங்குகல்லூரி நடுத்தோட்டந் தன்னின்
நின்தல வரோதயரே யாடிருஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயமறை முடிபுணரா ஞானத்தின் திருவுருவே

தூமறையோர் போற்று மொப்பிலா மணியே

ஆய கலைகளின் வேந்தனாம் வித்தகனே!

ஓங்கார மெய்ப்பொருளே ஐங்கரனே!

மாண்புமிகு கல்விதரு சிவஞானக் களிறே!

மானிலம் போற்ற மாணவரை வாழவைப்பாய்!

மாளாத புகழ் சேர்க்கும் கல்லூரி நடுத்தோட்ட

ராஜவரோதயரே யாடீர் ஊஞ்சல்

நாரணனும் நாரதரும் துதிகள் பாட

நான்முகனும் தேவர்கள் வணங்கிநிற்ப

பூரணமாய் மாணவரகள் பொலிந்து ஆட

நாமகளும் பூமகளும் வடந் தொட்டாட்ட

காரணமாய் நின்றஎழிற் கணபதியும்

பாரதந்தான் எழுதிவைத்து வாழ்த்துக் கூற

ஓரணங்காம் வல்லமையோ டமர்ந்திருந்து

அடியார் குறைதீர்க்க ஆடீருஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணாரும் அயனாரும் அரியும் ஆட
பங்கமரும் சித்திபுத்தியோடு இணைந்தே ஆட
கரமான தும்பிக்கை அசைந்தே ஆட
அரசடி நடுத்தோட்ட இராஜவரோதயர் ஆட
வரமாகச் சக்திவேல் கொடுத்தபாலன்
வடிவேலன் வள்ளி தெய்வானை ஆடப்
புரமேவு வண்ணை அரசடிவீதியாழ் இந்து மகளிர் கல்லூரி
மேவும்
நடுத்தோட்ட இராஜவரோதயரே ஆமர் ஊஞ்சல்

ஆசிரியர் ஆர்வமுடன் தம் தொழிலைஆற்ற
அன்பாக மாணவர்கள் கல்விஏற்ற
தேசம்புகழ் அதிபரும் நற்கருமமாற்ற
தேன் சிந்து மினியநல் கல்லூரியில்
சீர் பெருகு முத்தமிழின் வித்தகனே!
சிவகாமசுந்தரியின் முதல் மகனே!
ஆனந்த நடம் பயிலும் விநாயகனே!
அடியார்க் இனித்திருக்க ஆமருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

திருக்கோயில் அந்தணரும் அடியாரும் வாழி!
திருநிறைந்த மாணவரும் வாழி! வாழி!
வில்வமொடு வேம்புமே உயர்ந்து வாழி!
வித்தையும் வாழி! நல் வித்தகரும் வாழி!
இந்து மகளிர் கல்லூரி வாழி!, இளமை நிறை
சிறுமிகள் வாழி!, ஆசிரியர் வாழி! அதிபர் வாழி!
சிந்தூர விநாயகப் பெருமானே வாழி!, நடுத்
தோட்ட இராஜவரோதயரே, வாழிஎன் றாடீருஞ்சல்

## வாழி

நடுத்தோட்ட இராஜவரோதயன் என்றேபாரோர்போற்றும்
பரம்பொருளே! விநாயகரே! பரமாவாழி!
நன்னுளத்திற் பக்திசெய்வோர்க் கருணை நல்கும்
நாம் வணங்கும் தெய்வகணநாதா வாழி!
இந்துமகளிர் கல்லூரியின் தருமம் வாழி!
உலகமக்கள் எல்லோரும் ஓங்கி வாழி!
என்றுமருள் பாலிக்கும் இராஜவரோதயரே
எம்மானே கணபதியே இனிது வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

சிவசக்தி பாலனுக்கு லாலி! சுபலாலி!

வித்தகனாம் வேந்தனுக்கு லாலி! சுபலாலி!

எல்லையற்ற வயிறனுக்கு லாலி! சுபலாலி!

எங்கும் நிறைந்தவர்க்கு லாலி! சுபலாலி!

இந்து மகளிர் கல்லூரிக்கு லாலி! சுபலாலி!

நடுத்தோட்ட இராஜவரோதயருக்கு லாலி! சுபலாலி!

எங்கும் நிறைபூரணனுக்கு லாலி! சுபலாலி!

ஏரம்ப மூர்த்திக்கு லாலி! சுபலாலி!

## எச்சரிக்கை

மோதகப் பிரியனே முதல்வனே! எச்சரிக்கை!

கணபதியே விநாயகனே! எச்சரிக்கை!

அங்குசமும் பாசமும் சேர் அப்பனே! எச்சரிக்கை!

அடியார் தம் குறைதீர்க்கும் நாதனே! எச்சரிக்கை!

## மங்களம்

செந்தமிழ் சேர் கல்லூரிக்கு மங்களம்! சுபமங்களம்!

வந்தனை செய்யடியார்க்கு மங்களம்! சுபமங்களம்!

நடுத்தோட்ட இராஜவரோதயருக்கு மங்களம்! சுபமங்களம்

நலஞ் சேர்க்கும் விநாயகருக்கு மங்களம்! சுபமங்களம்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக வரவு செலவு விபரம் - 2020

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| உபயகாரர் நிதி(திரு.விக்னேஸ்வரன் குடும்பம்) | 226000.00 | |
| நன்கொடை | 68200.00 | |
| நோடீஸ் | | 1700.00 |
| குருமார்களுக்குரிய வேட்டி, விநாயகர் பட்டுக்கள் | | 34900.00 |
| மருந்துக்கடை பொருட்கள் | | 35000.00 |
| மண்சட்டி | | 340.00 |
| கண்ணாடி | | 600.00 |
| பிள்ளையார் வேட்டி | | 1200.00 |
| 1kg சவர்க்காரப் பவுடர், 750g புளி | | 620.00 |
| தேங்காய் 125 | | 7500.00 |
| 300 வெற்றிலை, 1/2kg சீவல் | | 725.00 |
| நீத்துக்காய் | | 1200.00 |
| மொப்பர், வைபர் | | 1000.00 |
| அவல், பச்சைஅரிசி, சக்கரை | | 1425.00 |
| பிறாசோ | | 320.00 |
| மஞ்சள் கயிறு 6 கட்டு | | 280.00 |
| தேங்காய் எண்ணை (6 l) | | 3300.00 |
| வாழைக்குலை, வாழையிலை | | 1700.00 |
| 2அங்கர், சீனி, நெஸ்கபே | | 1553.00 |
| பூமாலை | | 1250.00 |
| தயிர் | | 150.00 |
| சாக்கு, ஸ்யிற்றர், சணல் | | 675.00 |
| இஞ்சி, இராசவள்ளி, தாமரைக்கிழங்கு | | 610.00 |
| பழங்கள் | | 2880.00 |
| செவ்விளநீர், கரும்பு | | 800.00 |
| குருமார்களுக்கான சோடா | | 1150.00 |
| மேளம் | | 6000.00 |
| சொப்பின் | | 100.00 |
| குருமாருக்குரிய தட்சணை | | 169000.00 |
| மொத்தம் | | 275978.00 |
| மேலதிகம் | | 18222.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரி

நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக நன்கொடை- 2020


| நன்கொடையாளர் விபரம் | தொகை |
|---|---|
| திருமதி.மிமலாதேவி விமலநாதன் | 11200.00 |
| திருமதி.சாவித்திரி மதிரூபன் | 11000.00 |
| திருமதி.யசோதா விக்னேஸ்வரமூர்த்தி | 10000.00 |
| செல்வி.நளாயினி அம்பலவாணர் | 6000.00 |
| திருமதி.காந்திமதி சிவனேசன் | 6000.00 |
| திருமதி.சோபனா பிருகதீஸ்வரன் | 5000.00 |
| திருமதி.கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் | 2500.00 |
| திருமதி.சிவமதி திருமாறன் | 2500.00 |
| திரு.தர்மராசா சிந்துஜன் | 2500.00 |
| செல்வி.கலா நமசிவாயம் | 2000.00 |
| செல்வி. சூரியவதனி அரசரட்ணம் | 2000.00 |
| திருமதி.கௌரிபாலினி கோடீஸ்வரன் | 1000.00 |
| திருமதி.சத்தியபவானி செபமாலைதாசன் | 1000.00 |
| திருமதி.ஓம்சக்தி யசோதன் | 1000.00 |
| திருமதி.பிரியதர்சினி வாகீசன் | 1000.00 |
| திருமதி.இராஜேஸ்வரி சந்திரலிங்கம் | 1000.00 |
| திருமதி.விஜிதா பரம்தில்லைராஜன் | 1000.00 |
| திரு.தண்டராசா கிருபாகரன் | 500.00 |
| திருமதி.தில்லைரஞ்சினி கணேசமூர்த்தி | 500.00 |
| செல்வி.விமலாதேவி அம்பலவாணர் | 500.00 |
| மொத்தம் | 68200.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org